# தமிழ் நாடகத்தில் பெண் கலைஞர்கள்

கி. மகாலட்சுமி,*1, மு.சுப்பையா *2

*[1]முனைவர் பட்ட ஆய்வாளர், நிகழ்கலைத்துறை, புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி*
*[2]உதவிப் பேராசிரியர், நிகழ்கலைத்துறை, புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி*

தமிழ்ச் சூழலில் பெண்கள் நாடகத்துறையில் ஈடுபடத் தொடங்கி சுமார் அரை நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரை, சங்க காலத்தில் பெண் நிகழ்த்துக்கலைஞர்கள் இருந்தமைக்கான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. ஆனால், அதற்கு அடுத்து வந்த இலக்கியங்களில் பெண் நிகழ்த்துக் கலைஞர்களின் பங்களிப்புகள் கிடைக்கப் பெறவில்லை. தமிழ் நாடக மரபில் பாலாமணி அம்மையாரின் பெண்கள் குழு, தனித்த முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழ் நாடகத்தில் ஆண் வேடமிட்டு நடித்த கே.பி.சுந்தராம்பாள், விடுதலை இயக்கச் சார்புடைய கலைக் குழுக்களில் செயல்பட்ட பெண்கள் எனப்பெண்களுடைய நாடகச் செயல்பாடுகள் குறிப்பிட்டுச் சொல்லும் படியாகவே இருந்துள்ளது.

தமிழ்ச் சூழலில் இயக்கம் சார்ந்த பிரச்சாரங்களில் பெண்கள் கலைக்குழுக்களின் தேவை உணரப்பட்டது. ஆனால், பெண் பார்வையாளர்களை அணுகுவது அந்தக் காலத்தில் சிரமமாக இருந்தது. எனவே, பெண்கள் நாடகம் பார்ப்பதற்கு ஏதுவாக அவர்கள் பணி செய்யும் இடங்களிலும், வீடுகளுக்கு அருகிலும் நிகழ்த்துக் கலை நிகழ்ச்சிகள் நடத்துவது அவசியமானது. பிற கலாச்சாரக் குழுக்களில் பெண்களை மையப்படுத்திய பண்பாட்டுச் செயல்பாடுகள் அதிக முக்கியத்துவம் பெறாமல் போயின. இத்தகைய வரலாற்றுப் பின்னணியில் நாடகச் சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து விரிவாக விவாதிக்க வேண்டியுள்ளது. ஏனெனில், நாடக வெளிக்குள் இயங்கும் பெண்களுக்கு உரிய அங்கீகாரமும் மரியாதையும் தரப்படுவதில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழில் நாடக மேடையில் தமது அழுத்தமான பேச்சாலும் நடிப்பாலும் வலுப்படுத்தியவர்கள் பெண்களே ஆவர். எனினும், பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. அவ்வாறு, பெண்களின் பங்களிப்பு தமிழ் நாடக அரங்கில் குறைவாக இருப்பதற்கான காரணங்களை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் நாடகத்தில் பெண்ணியச் சிந்தனைகள் ஆங்காங்கே தென்படத் தொடங்கின. எனினும், நாடகச் செயல்பாடுகளில் ஈடுபடும் பெண்களை, சக மனுஷியாக பார்க்கும் பார்வை இல்லை என்றே சொல்லலாம். இந்நிலை இந்தக் காலகட்டத்திற்கு உரியது மட்டுமன்று. காலம் காலமாக, பெண்கள் அனுபவித்துவரும் ஒன்றுதான். சிலப்பதிகாரத்தில் வரும் கானல் வரி இதற்கு ஒரு சான்றாகும். மாதவி, கோவலன் இருவரும் புனலாடும் பொழுது பாடல்களால் தங்களது கருத்தைப் பரிமாறிக் கொள்கின்றனர். அப்போது கோவலன், காவிரியை ஒரு பெண்ணாக நினைத்து பாடல் பாட, மாதவி கற்பனையில் ஓர் ஆணை நினைத்து எதிர்ப்பாடல் பாடுகிறாள். இதனால் ஊடல் கொண்ட கோவலன் நீ ஆடல் மகளே ஆதலின் இது உனக்குப் பொருந்தும் என மனதை நோகச் செய்து பிரிந்து செல்கிறான்.

பெண் நிகழ்த்துக் க்குக் குடும்ப வாழ்க்கை மறுக்கப்படுகிறது என்பதற்கு இது ஒரு சான்று. பொதுவாக, தந்தைவழிச் சமூகத்தில் ஆணாதிக்க மனப்பான்மை, தனிச்சொத்துடைமை, பெண்ணைப் போகப் பொருளாகப் பார்த்தல், ஒருதார மணமுறை, கற்புக் கோட்பாடு ஆகியவை, பெண்ணடிமைத் தனத்திற்கான காரணங்கள் ஆகும். சமூகத்தில் ஒரு ஆணுக்கு உள்ள சகல உரிமைகள் பெண்ணுக்கும் வேண்டும் என்பது பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படை. மேலைநாட்டுப் பெண்ணியக் கோட்பாடுகளும், தமிழில் பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகளும் தமிழ் நாடகச் சூழலில் நுழையவே இல்லை எனலாம். ஏனெனில், நாடகத் துறையில் பங்குபெறும் பெண்கள் வெறும் உடலாக மட்டுமே பார்க்கப்பட்டார்கள் பார்க்கப் படுகிறார்கள். கலை என்பதிலிருந்து அந்நியப் படுத்தப் பட்டார்கள். ஏனெனில், இந்த சமூகம் ஆண் எனில் அறிவு என்பதாகவும், பெண் என்றால் அழகு என்பதாகவும் கட்டமைத்து வைத்துள்ளது. கலைசார் செயல்பாட்டு வெளிகளில் பெண்கள் ஒதுங்கி இருப்பதற்கும், ஒதுக்கப் படுவதற்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது இத்தகைய ஆணாதிக்க மனநிலையே ஆகும்.

நாடகச் செயல்பாடுகளில் ஈடுபடும் பெண்களைப் பொது மகளிராகப் பாவிக்கும் மனோபாவம் நாடகக் கலைஞர்களிடமும், பார்வையாளர்களிடமும் காணப்படுகிறது. மறைந்த நாடகக் கலைஞர்கள் எம்.ஆர்.ராதாவின் பின்வரும் கூற்று இதனை உறுதி செய்கிறது. “பெண்கள் நடிக்க வந்தது கலை மேம்பாட்டுக்கு உதவியதோ இல்லையோ கலைஞர்களிடமிருந்து இயற்கைக்கு விரோதமான பாலியல் ஒழுக்கங்கள் விடுபட வாய்ப்பாக இருந்தது” (கி. பார்த்திபராஜா, காயாத கானகத்தே, ப. 128)

நாடகத்துறை சார் பெண்கலைஞர்களுக்குக் குடும்ப வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாகவே உள்ளது. ஆண் தலைமைச் சமூகத்தில் பொதுவாக, பெண்கள் எதிர்கொள்ளும் உடலியல், உளவியல், சமூகவியற் சிக்கல்கள் பெண் நாடகக் கலைஞர்களுக்குச் சற்றுக் கூடுதலாகவே அமைந்துள்ளது. இத்தகைய சிக்கல்கள் சமூகம் சார்ந்ததாகவும், அரங்கம் சார்ந்ததாகவும், குடும்பம் சார்ந்ததாகவும் மூன்று வகையாக அமைகின்றது.

## 1. சமூகம்சார் சிக்கல்கள்

பெண் நாடகக் கலைஞர்களை இந்தச் சமூகம் குறைத்து மதிப்பிடுவதற்கும் இழிவாக மதிப்பிடுவதற்கும் காரணம் ஆண்களோடு சரிசமமாகப் பழகுவதும் ஆண்களைத் தொட்டுப் பேசுவதும் ஆகும். நாடகத்தில் நடிக்கும் பெண்களின் கலை உணர்வுகளையும் நடிப்பாற்றலையும் மதிக்கும் போக்கு இந்தச் சமூகத்தில் மிகவும் குறைவு. இன்னும் சொல்லப்போனால், பெண் நாடகக் கலைஞர்களை வேசி மகள் போலத்தான் இந்தச் சமூகம் பார்க்கின்றது. நாடகத்தில் நடிக்கும் பெண்களை, நாடகம் முடிந்த பிறகு பாலுறவுக்கு அழைப்பவர்களும் உண்டு. மதுரையில் நாடகத்தில் நடித்துவிட்டுக் கிளம்பும்போது, அந்த நாடகத்தில் நடித்த பெண் நாடகக் கலைஞரை அந்த

ஊர் பணக்காரர் ஒருவர் பணம் கொடுத்து பாலுறவுக்கு அழைக்க, கோபம் கொண்ட அந்தப் பெண் கலைஞர் அவரைச் செருப்பால் அடித்து தன் எதிர்ப்பைக் காட்டிவிட்டுக் கிளம்பி வந்தாராம். இப்படி பல சம்பவங்கள் பதிவு செய்யப்படாமல் உள்ளன. ஏனெனில், நாடகக்காரி தானே, அவள் சொல்வதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என இந்தச் சமூகம் போகிறபோக்கில் இவற்றையெல்லாம் கடந்து செல்ல முற்படுகிறது. பெண்களின் வலி, அவர்களுக்குள்ளாக புதைந்து போகிறது. இத்தகைய சமூக நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியாமல், மன அழுத்தங்களுக்கு உள்ளாகி நாடக அரங்கச் செயல்பாடுகளிலிருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலைக்குப் பெண் கலைஞர்கள் தள்ளப்படுகின்றனர். இருப்பினும் இத்தகைய சமூகச் சிக்கல்களைக் கடந்துதான் பெண் கலைஞர்கள் நாடகத் துறையில் தங்களது பங்களிப்பை ஆற்றி வருகின்றனர். இவர்கள் பாராட்டுக்குரியவர்களே.

## 2. அரங்கம்சார் சிக்கல்கள்

பெண் நாடக நடிகைகள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் சமூகம் சார்ந்ததாக மட்டுமில்லாமல் நாடகத்துறைசார் கலைஞர்களிடமிருந்தும் இத்தகைய சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். பெண் நாடகக் கலைஞர்களைக் கையைப் பிடித்து இழுத்தல், புடவை முந்தானையைப் பிடித்து இழுத்துத் தன் மேல் சாயும் வண்ணம் செய்தல், முத்தம் கொடுத்தல் முதலிய பல்வேறு பாலியல் தொந்தரவுகளுக்குப் பெண் கலைஞர்கள் உள்ளாக்கப்படுகின்றனர். சிலநேரங்களில் நாடக மேடையில் நடிக்கும்போது பார்வையாளர்களின் பாராட்டைப் பெற வேண்டும் என்பதற்காக, அல்லது கைதட்டலைப் பெற வேண்டும் என்பதற்காக சக பெண் நடிகைகளிடம் வரம்புமீறி நடந்து கொள்ளுதலும் உண்டு. மேடையிலேயே கட்டிப்பிடித்தல், முத்தம் கொடுத்தல், பாலியல் சொற்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றை இதற்குச் சான்றாகச் சொல்லலாம். இத்தகைய பாலியல் சீண்டல்களைச் சகித்துக் கொள்ள முடியாமல் கேள்வி எழுப்பும் பெண்கலைஞர்களுக்கு அடுத்தடுத்த நாடகத்தில் வாய்ப்பு வழங்கப்படுவதில்லை.

நாடகத் திரைச்சீலைக்குப் பின்னால் நடக்கும் பாலியல் தொந்தரவுகள் நாடகச் செயல்பாடுகளில் இருந்து விலகிச் செல்ல வைத்துவிடுகின்றன.

## 3. குடும்பம்சார் சிக்கல்கள்

பெண் நாடகக் கலைஞர்கள் குடும்பச் சூழலில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பலதரப்பட்டவை. பொதுவாக ஆணாதிக்கச் சமூகத்தில் குடும்ப அமைப்பிற்குள் பெண்களின் இருப்பு கேள்விக்குரியது. அதிலும், நாடகச் செயல்பாடுகளில் ஈடுபடும் பெண்களுக்கு மேலும் அது சிக்கலுக்குரியது. குடும்பத்திற்குள் உறவினர்களுடனும் வீடுகளுக்கு அருகில் வசிப்பவர்களுடனும் பேசும்பொழுது, குறிப்பாக கணவனுடன் பேசும்போது சற்று யோசித்தே பேச வேண்டியுள்ளது. பேச்சுவாக்கில் சொல்லப்படுகின்ற ஒற்றை வார்த்தை கூட குடும்ப வாழ்க்கையை மொத்தமாகச் சிதைத்துவிடும். நாடகக்காரி அப்படித்தான் பேசுவாள் என வார்த்தைகள் வந்துவிழும். அழுகையும் கண்ணீரும்கூட நடிப்பாகவே பார்க்கப்படும். அவர்களின் உணர்வுகள் பொருட்படுத்தப்பட மாட்டாது. நாடகக் கலையால் குடும்பச் சூழலில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட பெண் நாடகக் கலைஞர்களின் வாழ்க்கை, துயரமும் கண்ணீரும் நிரம்பியது. கூத்தாடப் போறவளுக்குக் குடும்பம் எதற்கு என்பதுதான் பெண் நாடகக் கலைஞர்களின் சமூக நிலை.

பெண் நாடகக் கலைஞர்களின் திறமையையும் கலை ஆர்வத்தையும் நேசிக்கின்ற வாழ்க்கைத்துணை அமைவது மிகவும் அரிது. திருமணம் ஆன பெண் கலைஞர்களின் நாடகச் செயல்பாடுகள் கணவனால் கண்காணிக்கப் படுவதாகவும், சந்தேகத்திற்குரியதாகவுமே இருக்கின்றது. சக நாடகக் கலைஞர்களுடன் பேசுவதும் பழகுவதும் குடும்ப வாழ்க்கையில் விரிசல் ஏற்படக் காரணமாக அமைகின்றது.

நிறைவாக, ஆணாதிக்கச் சமூகத்தில் பெண் சக மனுஷியாக அன்றி, வெறும் உடலாக மட்டுமே பார்க்கப்படுவதும், பெண் இரண்டாம் பாலினமாக நடத்தப்படுவதும் மாறும் நிலை சமூகத்தில் உருவாக வேண்டும். பெண்ணின் உலகம் குடும்பம் என்பதாக மட்டும் சுருக்கப்படாமல், அவர்களின் திறமை அங்கீகரிக்கப்பட வேண்டும். பெண்களை அழகுக் குறியீடாக மட்டுமே மதிப்பிடாமல், அவர்களது திறமையும் அறிவும் போற்றப்படும் சூழல் உருவாக வேண்டும். கலை இலக்கியச் செயல்பாடுகளில் பெண்கள் சுதந்திரத்துடன் செயல்படும் போது பெண்களை மையப்படுத்திய, காத்திரமான நவீன நாடக ஆக்கங்கள் நாடகச் சூழலில் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், நாடகச் செயல்பாடுகளில் ஈடுபடும் பெண்களுக்கான சமூக வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை அவ்வளவு ஆரோக்கியமானதாக இல்லை என்பது மறுக்கமுடியாத உண்மை. சமூகத்தின் பார்வை ஒருபுறமும், குடும்ப வாழ்க்கை மறுபுறமும் நாடகக் கலைஞர்களின் அணுகுமுறை இன்னொருபுறமும் என பெண் கலைஞர்களைச் செயல்பட விடாமல் ஒடுக்கும் காரணிகள் வலுவாகச் செயல்படுகின்றன. குடும்ப வாழ்க்கையைத் தியாகம் செய்யும் பெண் நாடகக் கலைஞர்கள் மட்டுமே நவீன நாடக அரங்கில் ஆளுமை செலுத்த முடிகின்றது. திருமணம் முடிந்த பிறகு, நாடகச் செயல்பாடுகளில் இருந்து விலகிய பெண்கள் குடும்ப வாழ்க்கையில் சிக்கலின்றி வாழமுடிகின்றது. ஏனெனில், பெண்களின் திறமையை அங்கீகரிக்க இச்சமூகமும், குடும்ப அமைப்பும் முற்படுவதில்லை. மேலும், பெண் நாடகக் கலைஞர்களின் நாடகப் பங்களிப்புகள் குறித்து முறையாக ஆவணப் படுத்துவது இன்றைய காலகட்டத்தின் தேவை. பெண் நாடகக் கலைஞர்களின் திறமைக்கு நாம் செய்ய வேண்டிய கடமையும்கூட.

## துணைநூற்பட்டியல்

[1] அ. பாக்கியம்,*"பெண்குல வரலாறு"*, நூல் எண் - 104, முதல் பதிப்பு, மருதா பதிப்பகம்,ஏப்ரல் 2006
[2] டாக்டர். அன்னி தாமசு,*"தமிழக மகளிரியல்"*, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 2002
[3] பேரா.சு.சண்முகசுந்தரம்,*"தமிழ்நாடகச் சரித்திரம் மரபிலிருந்து நவீனத்துக்கு"*, காவ்யா பதிப்பகம், சென்னை. 2008
[4] மு. பகவதி,*"தமிழ்மேடை நாடக வரலாறு"*, உலகத் தமிழாரய்ச்சி நிறுவனம், சென்னை.

## நேர்காணல்

[1] மாற்று நாடக இயக்கம் - 2017.
[2] கலைராணி– நாடக நடிகை (நவீன கூத்துப்பட்டறை, சென்னை.)
[3] சந்திரா – நாடக நடிகை (கூத்துப்பட்டறை, சென்னை.)
[4] வினோதினி– நாடக நடிகை (கூத்துப்பட்டறை, சென்னை.)